### அனைத்து சாதியினரும் அனைத்து மதத்தினரும் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்:

# சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி மதநல்லிணக்கத்துக்கு இன்று இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக இருக்கும் தொகுதி!

## திருவல்லிக்கேணியில் நடைபெற்ற கிறிஸ்தவப் பிரதிநிதிகள் சந்திப்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை,ஏப்.12-**

**சென்னை திருவல்லிக்கேணியில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதிக்கு உட்பட்ட கிறிஸ்தவ மக்கள், கிறிஸ்தவ கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.**

**அப்போது அவர், `` நம் சேப்பாக்கம்- திருவல்லிக்கேணி தொகுதி என்பது ஒரு சாதாரண தொகுதி கிடையாது. அது மதநல்லிணக்கத்துக்கு இன்று இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய தொகுதி. அனைத்து சாதியினரும் அனைத்து மதத்தினரும் இன்று ஒன்றாக ஒற்றுமையாக நம் தொகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்'' என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

நம் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியைச் சேர்ந்த கிறிஸ்தவச் சொந்தங்களை எல்லாம் சந்திப்பதில், உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுக்கு நானும், எனக்கு நீங்களும் புதுசு கிடையாது, நமக்குள் அறிமுகம் தேவை இல்லை. நாம் பல முறை தனித்தனியாகச் சந்தித்துள்ளோம். இன்று அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து, ஒரே இடத்தில் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம்.

நிகழ்ச்சியைச் சிறப்பாக ஏற்பாடு செய்த மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அவர்களுக்கும் கழக நிர்வாகிகளுக்கும், கலந்துகொண்ட அத்தனை பேருக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.






### கலைஞர் பேரன்பு கொண்டவர்

கழகத்துக்கும் சிறுபான்மையின மக்களுக்குமான உறவு இன்றைக்கோ நேற்றோ உருவான உறவு கிடையாது. கலைஞர் அவர்கள் கிறிஸ்தவ மக்கள் மீது மிகுந்த பேரன்பு கொண்டவர். அதே மாதிரிதான் எங்களின் கழகத் தலைவர் அவர்களும் உங்கள் மீது மதிப்பும் மரியாதையும் கொண்டவர், நம் தலைவர் முதலமைச்சர் அவர்கள். அதற்கு ஒரு முக்கிய காரணம், எங்கள் கழகத் தலைவர் அவர்கள் படித்ததும் ஒரு கிறிஸ்தவக் கல்வி நிறுவனம்தான், நான் படித்ததும் ஒரு கிறிஸ்தவக் கல்வி நிறுவனம்தான். அதனால் எப்பொழுதுமே ``ஆமாம், நான் கிறிஸ்தவன் என்று பெருமையாகச் சொல்லிக்கொள்கிறேன்'' என்று சொல்வார்கள். எனவே, அந்த உணர்வோடும் பாசத்தோடும் தான் உங்களை எல்லாம் சந்திக்க நான் வந்திருக்கிறேன்.

### முக்கியமான காலகட்டம்

இன்னும் சொல்லப்போனால், ``நான் உங்களில் ஒருவன்'' என்கின்ற உணர்வோடு இங்கு வந்திருக்கிறேன். முக்கியமான காலகட்டத்தில் நாம் மீண்டும் சந்திக்கிறோம். இன்னும் 13 நாட்களில் சட்டமன்றத் தேர்தல், நம் தமிழ்நாட்டை மீண்டும் யார் ஆளப் போகிறார்கள் என்கின்ற நிலையில் இந்தத் தேர்தல் நடைபெற இருக்கிறது. அப்படிப்பட்ட சமயத்தில் உங்களைச் சந்திப்பதைக் கூடுதல் முக்கியமான தருணமாக நான் கருதுகிறேன்.

இந்தச் சூழலில், தமிழ்நாட்டைப் பாதுகாக்கக்கூடிய, சிறுபான்மையின மக்களாகிய உங்களின் உரிமைகளை எல்லாம் பாதுகாக்கக்கூடிய நம் திராவிட முன்னேற்றக் கழகம், மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும் என்கின்ற அந்த எண்ணம், இன்று நம் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய அனைத்து தமிழ் மக்களின் எண்ணமும் அதுவாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி மக்களுக்கு அந்த எண்ணம் கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறது. அதற்குக் காரணம் நம் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி என்பது ஒரு சாதாரண தொகுதி கிடையாது. அது மதநல்லிணக்கத்துக்கு இன்று இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய தொகுதி. அனைத்து சாதியினரும் அனைத்து மதத்தினரும் இன்று ஒன்றாக ஒற்றுமையாக நம் தொகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை இந்தத் தொகுதியில் நீங்கள் ஏற்கனவே வெற்றிபெற வைத்தீர்கள். கடந்த சட்டமன்றத் தேர்தலில் கிட்டத்தட்ட 70,000 வாக்கு வித்தியாசத்தில் என்னையும் வெற்றிபெற வைத்தீர்கள்.

### பெருமை அடைகின்றேன்

கடந்த ஐந்து வருடமாக இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகச் செயல்பட்டதில் நான் உண்மையிலேயே மிகுந்த பெருமை அடைகின்றேன். உங்களுக்குத் தெரியும், வெறும் தேர்தலுக்குத் தேர்தல் வருபவன், காலத்துக்கு வருபவன் நான் கிடையாது. தினந்தோறும் களத்தில் மக்களோடு இருப்பவன் நான். கடந்த ஐந்து வருடமாக உங்களுடன் நின்று கொண்டிருக்கிறேன், நீங்களும் என்னுடன் தான் நின்று கொண்டிருக்கிறீர்கள்.

இப்பொழுது நான் உங்களிடம் கேட்பது, இந்த அரசு, இன்னும் அதிகமாக, உங்களுக்கு உழைப்பதற்குத் தயாராக இருக்கிறது. நானும் தயாராக இருக்கின்றேன், அதற்கு உங்களின் ஆதரவு தேவை. தி.மு.க.ழகத்தைப் பொறுத்தவரைக்கும் உங்களுக்குப் பாதுகாப்பு அரணாக மட்டுமல்ல, உங்களின் நலனுக்காக அடுக்கடுக்கான திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறோம்.

### கிறிஸ்தவ நலத் திட்டங்கள்

கிறிஸ்டியன் ப்ரீஸ்ட் அண்ட் சர்ச் எம்பிளாயீஸ் வெல்பேர் போர்டு என்கின்ற நலவாரியம் நம் திராவிட மாடல் ஆட்சியில்தான் தொடங்கப்பட்டது.

பழைமையான தேவாலயங்களைப் புதுப்பிக்கின்ற அதற்குத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

உதாரணத்துக்கு, சென்னையில் இருக்கக்கூடிய 'செயின்ட் பால்ஸ் சர்ச்' உள்ளிட்ட தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் இருக்கக்கூடிய பல்வேறு தேவாலயங்கள் இன்று புதுப்பிக்கப்பட்டு இருக்கின்றன.

நம் திராவிட மாடல் ஆட்சியில், இதுவரைக்கும் எட்டு தேவாலயங்கள் புதுப்பிக்கின்ற பணி இன்று நடைபெற்று வருகிறது. 2025-26 நிதியாண்டில் மட்டும் 10 கோடி ரூபாயை நம் முதலமைச்சர் அவர்கள் இதற்காக ஒதுக்கிக் கொடுத்திருக்கின்றார்.

ஜெருசலம் யாத்திரைக்கு நிதி உதவி வழங்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கானவர்கள் யாத்திரைக்குச் சென்று வந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்படி ஒருபுறம் சிறுபான்மையின மக்களுக்கான நலத்திட்டங்கள், மறுபுறம் மதச்சார்பின்மையைப் பாதுகாக்கின்ற அரசியல், இந்த இரண்டையும் நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாக வெற்றிகரமாகச் செய்து கொண்டு வருகிறார்கள்.



> ### தினந்தோறும் களத்தில் மக்களோடு இருப்பவன் நான்!
>
> **கடந்த ஐந்து வருடமாக இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகச் செயல்பட்டதில் நான் உண்மையிலேயே மிகுந்த பெருமை அடைகின்றேன். உங்களுக்குத் தெரியும், வெறும் தேர்தலுக்குத் தேர்தல் வருபவன், காலத்துக்கு வருபவன் நான் கிடையாது. தினந்தோறும் களத்தில் மக்களோடு இருப்பவன் நான். கடந்த ஐந்து வருடமாக உங்களுடன் நின்று கொண்டிருக்கிறேன், நீங்களும் என்னுடன்தான் நின்று கொண்டிருக்கிறீர்கள்.**

இன்று இந்தியாவின் நிலைமை உங்களுக்குத் தெரியும். இன்று தமிழ்நாட்டைத் தவிர, இந்தியா முழுவதும் வெறுப்புப் பிரச்சாரம் நடந்தாலும், மதவாதம் தலைதூக்கி ஆடினாலும், தமிழ்நாடு என்றைக்குமே ஒரு அமைதிப் பூங்காவாகத்தான் இன்று நாம் திகழ்ந்து கொண்டிருக்கிறோம். அதற்குக் காரணம் நீங்களும் நானும்தான், அதற்குக் காரணம் நம் திராவிட முன்னேற்றக் கழக அரசு தான், நம் முதலமைச்சர்தான். வடநாட்டில் பாசிச சக்திகள் இன்று தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கின்றன. பல்வேறு உதாரணங்கள் இருக்கின்றன.

### பாசிசக் கூட்டம் முயற்சி

கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் உள்ளே சென்று தாக்குதல் நடத்துகிறார்கள், இஸ்லாமியர்களைத் தாக்குகிறார்கள். இப்படித்தான் வடமாநிலங்களில் சிறுபான்மையின சமூகங்களை அச்சுறுத்தி வைத்திருக்கிறார்கள். அதே மாதிரி ஒரு நிலைமையை, தமிழ்நாட்டிலும் ஏற்படுத்த வேண்டும் என்று பாசிசக் கூட்டம் முயற்சி செய்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இன்று சங்கிகளின் சூழ்ச்சி எதுவும் தமிழ் மண்ணில் எடுப்படவில்லை. அதற்குக் காரணம் நம் முதலமைச்சர் அவர்கள்தான். நம் முதலமைச்சர் அவர்கள் சிறுபான்மையின மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் மிகுந்த உறுதியோடு இருக்கிறார்.

உதாரணத்துக்கு, சமீபத்தில் கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்கள், தேவாலயங்களை எல்லாம் குறி வைத்து ஃபாரின் கான்ட்ரிப்யூஷன் ரெகுலேஷன் அமெண்ட்மென்ட் (FCRA Bill) என்று ஒரு சட்டத் திருத்தத்தை ஒன்றிய பா.ஜ.க அரசு இன்று கொண்டுவரப் பார்க்கிறது.

வெளிநாட்டிலிருந்து தொண்டு நிறுவனங்களுக்கு வரும் நிதியை முறைப்படுத்தப் போகிறோம் என்கின்ற பெயரில், நடக்கப்போகின்ற மிகப்பெரிய ஒரு சூழ்ச்சி இது. விதிமுறைகளை மீறிவிட்டார்கள் என்று பொய்க்காரணத்தைச் சொல்லி, கிறிஸ்தவ நிறுவனங்களின் சொத்துக்களை அபகரிக்கின்ற முயற்சிதான் இந்த முயற்சி.

### தனித்துவமான அரசியல்

வக்ஃப் சட்டத் திருத்தம் மாதிரி கிறிஸ்தவ நிறுவனங்கள் மேல் நடத்துகின்ற ஒரு நேரடித் தாக்குதல் இந்தத் தாக்குதல். இந்தச் சட்டத் திருத்தத்தை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று கழகத் தலைவர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

இது ஒரு சின்ன உதாரணம்தான். தமிழ்நாட்டு அரசியல் எப்போதுமே தனித்துவமான அரசியல். மதநல்லிணக்கத்தைப் பேசுகிறவர்களைத்தான் தமிழ்நாட்டு மக்கள் ஆதரிப்பார்கள், மதநல்லிணக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களைத்தான் தமிழ்நாட்டு மக்கள் என்றைக்குமே கொண்டாடுவார்கள். வெறுப்பு அரசியல் பரப்புகின்ற பா.ஜ.க-வைத் தமிழ்நாட்டு மக்கள் என்றைக்குமே ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள்.

நேரடியாக வந்தால் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று தெரிந்து தான், அடிமைகளையும் துரோகி கூட்டத்தையும் கூட்டணியில் சேர்த்துக்கொண்டு இன்று சங்கிகள் கூட்டம், பாசிசக் கூட்டம் உள்ளே நுழையப் பார்க்கிறது.

### நீங்கள் பலப்படுத்த வேண்டும்

தமிழ்நாட்டுக்குள் நுழைய முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற சிறுபான்மையினர் விரோத பா.ஜ.க-வை, இன்று அ.தி.மு.க-வுடைய தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் தன் தோள் மேல் தூக்கி வைத்துக் கொண்டு நுழையப் பார்க்கிறார். பாசிஸ்டுகளையும் அடிமைகளையும் இந்தத் தேர்தலில் நாம் ஓட ஓட விரட்ட வேண்டும்.

அதற்கு, சிறுபான்மையின மக்களுக்கு, குறிப்பாக, கிறிஸ்தவ சமூக மக்களுக்கு எப்போதும் பாதுகாப்பாக இருக்கக்கூடிய தி.மு.க-விற்கு நீங்கள் ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பா.ஜ.க-வைத் துணிச்சலோடு எதிர்த்து நிற்கக்கூடிய நம் தலைவரின் கரத்தை நீங்கள் அனைவரும் சேர்ந்து பலப்படுத்த வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்போடும் உரிமையோடும் கேட்டுக்கொள்கிறேன்.

நம் தலைவர் சொன்ன மாதிரி வருகின்ற தேர்தல், 'தமிழ்நாடு வெர்சஸ் டெல்லி' என்பதுதான் இந்தத் தேர்தல். மதநல்லிணக்கத்துக்கும் பாசிசத்துக்கும் இடையே நடக்கக்கூடிய தேர்தல் இந்த சட்டமன்றத் தேர்தல்.

இதில் நம் வெற்றி உறுதியான வெற்றியாக இருக்க வேண்டும். கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும், நம் முதலமைச்சர் இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் அமர வேண்டும்.

திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய நீங்கள் அனைவரும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு உங்களின் பேராதரவைத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் எனக்கும், அதே மாதிரி நம் அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதியில் சகோதரர் நே.சிற்றரசு அவர்களுக்கும் நீங்கள் உங்களின் பேராதரவைத் தந்து மிகப்பெரிய வெற்றியை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நிகழ்ச்சிக்கு வருகை தந்த அத்தனை பேருக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

மாநிலங்களவை உறுப்பினர் வில்சன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதிச் செயலாளர் மதன் மோகன், அகஸ்டின் பாபு, சி.ஹெச்.சேகர், வழக்கறிஞர் சரவணன், இப்ராஹிமுல்லா, பி.கே.பாபு, நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் டான் அசோக், டாக்டர் டி.எஸ்.எஸ்.சாமுவேல், பாஸ்டர் கெவின் கமல்ராஜ், ரெவரென்ட் டி.ஜோசப் பென்குமார், பாஸ்டர் சாம் செல்வராஜ், கிரேட்டா ஸ்வரூப், பாஸ்டர் டி.ரமேஷ், தமிழரசி சந்திரசேகர், ரெவரென்ட் ராஜா ப்ரீமேன் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.